**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மகாதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |

நாள்: **29.06.2021**

**பெறுநர்**

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : கேங்மேன் பணியாளர்களை சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்குவது - மீதமுள்ள 5000 கேங்மேன் பதவிகளை நிரப்புவது - தொடர்பாக**

**பார்வை :** 1. (Per) CMD TANGEDCO Proceedings No.8 dated 02.03.2019

2. Memo (Per) No.21170/A22A/A222/2020-1 dated 09.07.2020

மின்வாரியத்தில் ஆரம்ப நிலை காலிப்பணியிடங்கள் குறிப்பாக களப்பிரிவில் 25,000-க்கும் மேற்பட்ட காலிபணியிடங்கள் உள்ளதை கணக்கில் கொண்டு தேர்வு செய்யப்பட்ட 15,000-ம் கேங்மேன் பணியாளர்கள் நிரப்பிட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். இந்த நிலையில் 22.02.2021 அன்று நீதிமன்ற உத்தரவுப்படி 9613 கேங்மேன் பதவிகள் நிரப்பப்பட்டது.

இந்த நிலையில் வாரியம் ஏற்கனவே பலமுறை தொழிற்சங்கங்களோடு நடை பெற்ற பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொண்டபடி மீதமுள்ள 5,000-ம் கேங்மேன் பணியாளர்களை நிரப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தற்போதைய களச்சூழலை கணக்கில் கொண்டு கீழ்கண்ட நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. களப்பிரிவில் 23,000 களஉதவியாளர்களும், 8000-க்கும் மேற்பட்ட கம்பியாளர் பதவிகளும் காலி பணி இடங்களாக உள்ள நிலையில் கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட மீதமுள்ள 5,000 பேருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2. மேலும் மின்வாரியத்தில் புதிதாக பணியில் இணைந்த சொற்ப சம்பளம் வாங்கும் கேங்மேன் பணியாளர்களை அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் உத்தரவு வழங்கிட உரிய நடவடிக்கைக எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

3. மேலும் 2900 ITI படித்தவர்களை நியமனம் செய்யப் போவதாக பல கட்டங்களாக அறிவிப்பு செய்து கடந்த மார்ச் 2020-ல் அறிவிக்கை (Notification) வெளியிடப்பட்டது. கொரானா தொற்று நோய் காரணமாக நிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்ட இந்த களஉதவியாளர் பதவிகளுக்கு இவர்களையும் தேர்வு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் எங்கள் கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுத்து கேங்மேன், பதவிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி நியமன உத்திரவும், அறிவிக்கை வெளியிட்ட 2900 களஉதவியாளர் பணி நியமனங்களுக்கு உடற்தகுதி தேர்வு விரைந்து நடத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி!**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**

பொதுச்செயலாளர்